KPM

K **முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - ஜூலை 2019**

**பதினொன்றாம் வகுப்பு** பதிவு எண் | | | | | | |

நேரம்: 1.30 மணி **வணிகவியல்** மதிப்பெண்கள்: 50

பகுதி - அ

**I.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: **15×1=15**

1) வணிகம் இதனின் கிளையாகும்.
அ) அறிவியல் ஆ) பொருளியல்
இ) கணக்குப்பதிவியல் ஈ) கணிதம்

2) அறிவுசார் தடை இதன் மூலம் நீக்கப்படுகிறது.
அ) போக்குவரத்து ஆ) பண்டகசாலை
இ) விற்பனையாளர் ஈ) காப்பீடு

3) வியாபாரம் மற்றும் வணிகம் ................ பேரரசில் பொதுவானதாக இருந்தது.
அ) பல்லவர் ஆ) சோழர் இ) பாண்டியர் ஈ) சேரர்

4) தொழிலின் முதன்மைக் குறிக்கோள்
அ) இலாபம் ஈட்டுதல் ஆ) இலாபம் ஈட்டாமல் இருத்தல்

5) விழாக்கள் கொண்டாடுவது
அ) பொருளாதாரச் செயல்பாடுகள் ஆ) பண நடவடிக்கைகள்
இ) பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் ஈ) நிதி நடவடிக்கைகள்

6) வேறுபட்ட ஒன்றைத் தெரிவு செய்.
அ) பட்டய கணக்காளர் ஆ) மருத்துவர்
இ) வழக்கறிஞர் ஈ) மேற்பார்வையாளர்

7) வணிகம் என்பது எதனை உள்ளடக்கியது?
அ) பொருட்களை அளித்தல் ஆ) பொருட்கள் விலையிடல்
இ) பொருட்களைக் கொள்முதல் செய்தல் மற்றும் விற்பனை செய்தல்
ஈ) பொருட்களை தயாரித்தல்

8) அதிக அளவு அபாயத்தைக் கொண்டது
அ) உற்பத்தித் தொழில் ஆ) வணிகம்
இ) வியாபாரம் ஈ) வேலை செய்தல்

9) ஒரு முழுப்பொருள் தயாரிக்கப் பல நிலைகளைக் கடக்கும் உற்பத்தி முறை என்பது
அ) பகுப்பாய்வு உற்பத்தி தொழில்
ஆ) செயற்கை பொருள் உற்பத்தி தொழில்
இ) தொடர்முறை உற்பத்தி தொழில்
ஈ) ஒன்றுதிரட்டும் உற்பத்தி தொழில்

10)
1. தனிச்சேவை - i) வீட்டு வேலையாட்கள்
2. பொதுச்சேவை - ii) காப்பீடு
3. நிதிச்சேவை - iii) புதுப்புது எண்ணத்தை உருவக்குதல்
4. தனித்துவச் சேவை - iv) அரசு மருத்துவமனை
5. தனித்திறன் சேவை - v) பரஸ்பர நிதி மேலாண்மை

அ) i, iv, v, iii, ii ஆ) i, iv, ii, v, iii இ) i, ii, iii, iv, v ஈ) i, v, iv, ii, iii

11) கீழ்க்கண்டவற்றில் எது பழமையான வியாபார அமைப்பு வடிவம்?
அ) தனியாள் வணிகம் ஆ) கூட்டாண்மை
இ) கூட்டுறவுச் சங்கம் ஈ) நிறுமம்

12) பின்வருவனவற்றில் எந்த ஒன்று கூட்டுரு அமைப்பு இல்லாதது?
அ) கூட்டுப்பங்கு நிறுமம் ஆ) தனியாள் வணிகம்
இ) அரசு நிறுமம் ஈ) கூட்டுறவு

13) ................ சட்டத்தின்படி ஆண் வாரிசுகள் மட்டுமே வம்சாவழி சொத்தில் உரிமையுள்ளவர்கள்.
அ) இந்துச் சட்டம் ஆ) மிடாக்சரா சட்டம்
இ) தயாபாகா சட்டம் ஈ) மேற்கண்ட யாவும்

14) கூட்டாண்மை ஒப்பாவணத்தை இவ்வாறும் அழைக்கலாம்.
அ) சங்க நடைமுறை விதிகள்
ஆ) கூட்டாண்மை சங்க நடைமுறை விதிகள்
இ) கூட்டாண்மைச் சட்டம் ஈ) கூட்டாண்மை

15) நிறுமத்தின் இயக்குநரை கீழ்கண்டவற்றுள் யார் தேர்ந்தெடுக்கிறார்கள்?
அ) கடனீந்தோர் ஆ) கடனாளர்
இ) கடனீட்டுப் பத்திரதாரர் ஈ) பங்குதாரர்கள்

## பகுதி - ஆ

**II.** எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி: **4×2=8**
(கட்டாயம் வினா எண்: 21)

16) பண்டமாற்றுமுறை என்றால் என்ன?
17) சிறப்புத் தொழில் என்றால் என்ன?
18) வணிகம் வரையறு.
19) கூட்டுரு நிறுவனங்கள் என்றால் என்ன?
20) உறங்கும் கூட்டாளி என்பவர் யார்?
21) வரையறு பொறுப்பு என்றால் என்ன?

## பகுதி - இ

**III.** எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி: **4×3=12**
(கட்டாயம் வினா எண்: 27)

22) பாண்டியர் ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?
23) அங்காடி என்றால் என்ன? இதன் வகைகள் யாவை?
24) தொழிலின் சிறப்பியல்புகளை பட்டியலிடுக.
25) முதன்மை உற்பத்தித் தொழிலின் வகைகளை விளக்குக.
26) கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?
27) தகவலறிக்கை என்றால் என்ன?

## பகுதி - ஈ

**IV.** அனைத்து வினாக்களுக்கும் விடையளி: **3×5=15**

28) வணிகத்தின் பல்வேறு தடைகள் யாவை? அவை எவ்வாறு நீக்கப்படுகிறது? (ஏதேனும் ஐந்து)

**(அல்லது)**

தொழில், சிறப்புத் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு ஒப்பீடு செய்க.

29) இரண்டாம் நிலை உற்பத்தி தொழில்களின் வகைகளை அதன் செயல்பாடுகள் அடிப்படையில் விவரி.

**(அல்லது)**

தனியாள் வணிகத்தின் பண்புகள் யாவை? (ஏதேனும் ஐந்து)

30) கூட்டாண்மையின் வகைகளை விவரி.

**(அல்லது)**

அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?

---------